DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | செல்வகணேசன் | Age | : | 61 |
| F/N | : | குருசாமி | Occupation | : | முதல்நிலை உதவியாளர், மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்(ஓய்வு) |
| Village | : | பட்டிணம் காத்தான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10-th day of November 2022.

**10.11.2022.**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் முதல்நிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது பட்டிணம்காத்தானில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை நான் பார்த்தது இல்லை ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் கடந்த 03.09.2010 முதல் 06.07.2012 முற்பகல் வரை நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியாற்றி பின்பு பதவி உயர்வு பெற்று இரண்டாம் நிலை உதவியாளராக சார்பு நீதிமன்றத்தில் பணிக்கு சேர்ந்தேன். நான் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் பணியில் இருந்த போது ஆஜர் எதிரி மேற்படி நீதிமன்றத்தில் பணிசெய்யவில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2ல் தட்டச்சராக இருந்தவர் நீதிபதியின் கையெழுத்தை போட்டு போலியாக பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை தயார் செய்ததாக கேள்விப்பட்டேன். அதன்பேரில் அவரை தற்காலிக பணிநீக்கம் செய்த விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கை பற்றி வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் எனக்கு கீழ் உள்ளவர்களின் சம்பள பதிவேடுகள், வருகை பதிவேடுகள், இதர அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து வகையான ரசீது தயார் செய்து கருவூலகத்திற்கு அனுப்புவதும், எனக்கு கீழ் பணிபுரியும் அலுவலக பணியாளர்களை

கண்காணிப்பதும், மற்ற சாட்சிகள் சம்மன் மற்றும் பிறப்பு, இறப்பு மனுக்களை அனுப்புவதும், எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்படும் அறிவிப்பு மனுவில் கையெழுத்து போடுவது என்னுடைய பணி என்றால் சரிதான்.

**2.** நீதிமன்ற கோபுர முத்திரை என்னுடைய பொறுப்பில் இருந்து சம்பந்தப்பட்ட நீதிமன்ற அனைத்து உத்தரவுகளும் அது சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தர்களின் கையெழுத்து உள்ளதா என்பதை பார்த்து தான் முத்திரை இடுவதற்கு அனுமதிப்பேன் என்றால் சரிதான். மேலும் பிறப்பு, இறப்பு மனுக்கள் சம்பந்தமாக முத்திரை வைப்பதற்கு தட்டச்சர் திரு. மனோகரன் என்பவர் மூலமாகத்தான் என்னிடம் காண்பித்து கோபுர முத்திரை வைப்பதற்கு முன்பு நீதிபதி அவர்கள் கையெழுத்து உள்ளதா என்று சரிபார்த்த பிறகு தான் முத்திரை வைக்கப்படும் என்றால் சரிதான். நான் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் கடந்த 06.07.2012–ம் தேதி முதல் பணிமாறுதலாகி தலைமை எழுத்தராக இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் பணியில் இருந்தபோது போலி முத்திரை மற்றும் நீதிபதி போல் போலி கையெழுத்து மற்றும் போலி ஆவணங்கள் தயார் செய்து முறைகேடு செய்துள்ளதாக நமுனா கொடுத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**3.** அந்த விசாரணையில் MC ரவிச்சந்திரனையும், தட்டச்சர் மனோகரன் என்பவரையும் 21.12.2012–ம் தேதி தற்காலிக பணிநீக்கம் செய்தார்கள் என்றால் அதைபற்றி தெரிந்து கொண்டேன். எனது நீதிமன்ற அலுவலக கண்காணிப்பில் இருந்து வரும் ஒரே ஒரு தபால் அனுப்புகை பதிவேடு ஒன்றுதான் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். ஆனால் தட்டச்சர் மனோகரன் என்பவர் பிறப்பு, இறப்பு மனுக்களில் உள்ள உத்தரவு நகல்களை அனுப்புவதற்கு தனியாக ஒரு பிரத்யேக பதிவேடு உபயோகப்படுத்திய விவரம் எனக்கு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பாணையை பார்த்த பின்பு தான் தெரிய வந்தது.

**4.** பிறப்பு, இறப்பு மனுக்களின் உத்தரவுகளை தட்டச்சு செய்து நீதித்துறை நடுவர் அவர்களின் கையொப்பம் பெற்று என்னிடம் கோபுர முத்திரை பெற வருவார் என்றால் சரிதான். இது சம்பந்தமாக சுமார் 300 பிறப்பு இறப்பு மனுக்களுக்கு மேல் போலியாக நீதிபதியின் கையெழுத்து போட்டும், போலியான கோபுர முத்திரை, போலி ஆவணங்கள் தயார் செய்ததாகவும் இராமநாதபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அ.சா.1 அவர்கள் இராமநாதபுர மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன். அந்த புகாரின் பேரில் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**
**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | கிருஷ்ணவேணி | Age | : | 45 |
| F/N | : | பழனிச்சாமி | Occupation | : | நகல் பரிசோதகர், மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் |
| Village | : | சேதுபதி நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10-th day of November 2022.

**10.11.2022.**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சேதுபதி நகரில் குடியிருந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் நகல் பரிசோதகராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். நான் கடந்த 11.07.2012 ம் தேதி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 ல் பதிவுறு எழுத்தராக பணியில் சேர்ந்து 21.01.2013 வரை பணியாற்றினேன். பின்னர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு பணிமாறுதலாகி சென்றுவிட்டேன். கடந்த 2012–ம் ஆண்டு நான் நீதித்துறை நடுவர் எண். 2 ல் பணியில் இருந்த போது Despatch Register–யை பராமரிக்கும் வேலை என்னுடையது தான். அந்த சமயத்தில் தட்டச்சர் மனோகரன் என்பவர் பிறப்பு, இறப்பு பதிவு சான்றுகள் சம்பந்தமாக பதிவேட்டை பராமரித்து வந்தார். அந்த சமயம் மேற்படி பிறப்பு, இறப்பு சம்பந்தமான பதிவேட்டை பராமரிப்பது சம்பந்தமாக என்னிடம் கேட்ட போது நான் அதனை பராமரிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன். எனவே இந்த ஆஜர் எதிரி சம்பந்தப்பட்ட சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 11.07.2012–ம் தேதி முதல் 21.02.2013 ம் தேதி வரை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிந்து,

பின்னர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிந்தபோது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2ல் Magistrate Clerk ஆக பணிபுரிந்த ரவிச்சந்திரன் மற்றும் தட்டச்சர் மனோகரன் என்பவர் பணிபுரிந்து வந்தனர் என்றும், அந்த காலகட்டத்தில் 342 பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் பிறப்பு சான்று வழங்கும் பணிகளை மேற்படி ரவிச்சந்திரன் மற்றும் மனோகரன் செய்து வந்தார்கள் என்றும், போலியான முத்திரை தயார் செய்து அ.சா.1 அவர்களின் கையெழுத்தை போட்டு போலி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்பேரில் விசாரணை மேற்கொண்டு ரவிச்சந்திரன் மற்றும் மனோகரன் ஆகியோர்களை தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளார்கள் என்றும் மேற்படி நபர்களே மேற்படி சான்றுகளில் அ.சா.1 அவர்களின் கையொப்பம் பெற்று தாசில்தார் அலுவலகம் அனுப்புவார்கள் என்றும் மேற்படி நீதிமன்றத்தில் தபால் அனுப்புவது மட்டும் என்னுடைய பணியாக இருந்து வந்தது என்றும், பிறப்பு, இறப்பு பற்றிய மனு சம்பந்தமாக நான் பதிவேடுகளில் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், மனோகரன் என்பவர் பிறப்பு, இறப்பு சான்றுகள் அனுப்ப தனியாக ஒரு பதிவேடு பராமரிப்பு செய்து வந்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை</u>

<u>நீதிமன்ற கேள்வி</u>

எதிரி மனோகரன் பிறப்பு, இறப்பு சான்றுகள் அனுப்ப தனியாக Despatch Register பராமரித்து வந்தாரா என்றால் பராமரித்து வந்தார். நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் 342 பிறப்பு சான்றிதழ்கள் போலியாக தயார் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன் ஆனால் எண்ணிக்கை தெரியாது.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**